சந்திர காந்திசெய் பலகையை மடிமிசை தரித்தே
யிந்திர நீலமொத் திருந்தமை தோய்த்ததி லெழுதி
மந்திர மாமொழி மறைபயிலிளையவர் நெருங்கி
யெந்த வீதியு முழங்குவ திவையலா விலையே. (21

மறையின் மிக்கவ ரோதிய வோசையும் வரிசைத்
துறவின் மிக்கவர் திக்கிறி ஞோசையுஞ் சூழ்ந்தே
யிறைவ னைத்தொழு திருவகையு மேந்திய வாமீன்
முறை முறைப்படி கூறிய வோசையு முழங்கும். (22)

---

நகரப் படல முற்றிற்று.

ஆகப் படலம் 3-க்குத் திருவிருத்தம் 98,

## தலைமுறைப்படலம்

மருவிரி வாவி செந்தா மரைமலர்க் கைகளேந்தச்
சொரிமதுச் சிந்துஞ் சந்தத் துடைவசூழ் மதினத் தன்னிற்
றெரிதா வாசு செய்து தீனிலை நிறுத்திச் செல்வந்
தருநபி யிறசூ லல்லா தலைமுறை தோற்றஞ் சொல்வாம். (1)

தெரிபொரு ளரிய வேதத் துட்பொருட் டெளிவ தாக
வருபொரு ளாதி பாரின் முகம்மதை விளக்கஞ் செய்யப்
பரிவுறு மனுவா தத்தைப் படைக்கமண் ணெடுத்து வாவென்
றுரைதர இசுறா யீலு முவந்துமண் ணெடுத்துப் போந்தார். (2)

கதிர்வடி வொழுகி நின்ற ஹபீபுமெய் வகுக்க வேண்டி
விதியவன் ஜபுறயீலை விரைந்துமண் கொடுவா வென்றான்
றுதிபெறு மதீனத் தன்னிற் * றாயவோ ரிடத்திற் றோன்றி
யிதமுற வெடுத்துப் போந்தா ரிமையவர் தலைவனன்றே. (3)

திறனுறு ஜபுறயீல்தந் திருக்கையி லேந்திப் போந்த
பிறுதிவி தனையே மிக்கோர் பெறும்பதி சுவனந்தன்னி
னறைவிரி யமுத மெந்த நாளினு மதுர மாறாத்
துறைவிரி கதிக டோறுங் கழுவினர் துலங்க வன்றே. (4)

---

* ஆயவோ ரிடமென்ற வாக்கியத்தின் கருத்தை-நாம்செய் தச்சிட்டிருக்கும், சீறுவசனகாவியத்தில் நபிநாயக மதீனம்புக்கு சருக்கத்திற் கண்டுகொள்க.

பூலாக்க, வுறைதரு துன்ப மனைத்தையும் போக்கி யூழ்வினை பின்பு மொன் றுக்க, மறுமதி யகடு தொடுமுடி யறபா மலையினி லிருவருஞ் சேர்ந்தார். (35)

கூடிய விருவர் தாமுஞ்சத் தாவிற் குடியிருந் திருபது சூலி, ஞடிய பொருட்போ றற்பது பெய்னா கன்குறப் பெற்றதின் பின்னர் சூடிய கிரீட பதிநபி யமரர் துனைகளு யகமெனு மிறசூல், நீடிய வொளிவு சிறந்தொரு சூலி னிலயினைச் சீதுதித் தனரே. (36)

பருமலர்த் திணிதோ ளிறைமதிவதன முகம்மதின் பேரொளி யிலங்கித், தெரிமறை ஆத மக்களிற் சிறந்த சீதுவி னிடத்திருந்த தனுற், பரிவுறு நபிப்பட் டமும்வரப் பெற்றுப் பல்கலைக் குரிசிலென் றேத்த, வரியவன் கொடுத்த வரிசைக ணிறைந்த வைம்பது சுகுபிறங் கியதே. (37)

சீதுவி னிடத்தி னிருந்தவர் மதலை சிறந்தமா மணிமுடிக் குரிசின், மாதவர் கமல வதனயா னுசுதம் வயினுனைந் திருந்தணி சிறந்து, தாதவிழ் மலர்த்தார்க் குங்குமக் கலவைத் தடப்புயர் யானுசு தருகார், நீதிசேர் ஹறயினு னிடத்தினி லிருந்து நிலைபெற விளங்கிய தன்றே.

தண்மணிக் கதிர்விட் டெறிக்கும்வெண் கவிகைத் தடவரை மணிப்புய ஹறயினன், கண்மணி மகுலீ லிடத்தினி லிருந்து கவின் குடி கொண்டெழுந் தோங்கி, வெண்மணித் தாளத் தொடைம்புய மகுலீல் வேந்தருக் குற்றசே யெனவா, முண்மைநன் னெறிசே ரெறுதுவி னிடத்தி னுறைந்தினி திலங்கிய தன்றே. (39)

வடவரை குலுங்க கடமிடு தூங்க மன்னவ ரெறுதுதம் மதலை, கடகரிக் குவட்டி னிணையெனப் பணைத்த கதிர்முலைத் தடியிடை மடவார், விடமெனக் கரிய கொலைவிழிக் கணங்கள் வீற்றிருந் திடுமலர்ப் புயத்தா, ரிடிமுற சதிரு மூன்றிலா ருகுறா கிடத்தினிலிருந்திலங் கியதே. (40)

கடலெனத் தானை யாசர்வந் தீண்டிக் கைகுவித் திருபுற நெருங்கச், சுடர்மணித் தவிசி னுயர்ந்தர சியற்றிச் சுருதிநெருறை யுகுறாகு, புடையிருந் தவர்செய் யறமெலாந் திரண்டோர் புத்திரவடிவெடுத் தென்ன, விடுகொடை கவிப்பப் புரந்தசே யிதுரீ சிடத்தினி னிறைந்திருந் ததுவே. (41)

நன்னெறி நபினு ரொளியிருந் ததனு னபியெனும் பட்டமும் பெறலா, யுன்னுதற் கரிய முப்பது சுகுபு முடையவ னருளினு

முகம்ம தேயும தடியிணை காணவிவ் வழியி
னிகரில் வாளா வடைந்தது பயங்கர நினைபா
தகம கிழ்ந்திடச் செலுமென வாசர்கோன் களித்துப்
புகா றத்தனி கடந்தடுத் தனர்புயங் கனையே. (8)

இரைந்து மூச்சொடுங் கிடந்தகட் செவிதலை யெடுத்து
விரிந்தெ ரிந்தகட் கண்டயினன் முகம்மதை விழித்துத்
தெரிந்து நோக்கிநம் பிறைபவன் றாதெனத் தெளிந்து
வருந்து துன்பமின் றொழிந்தன மெனமகிழ்ந் ததுவே. (9)

மலை கிடந்துயர்த் ததையென விரிந்தவாய் பிளந்து
தலையெடுத்துநா விரண்டினு லொருசலாஞ் சாற்றி
நிலை யசைந்தொளி நெட்டுடல் குழைந்திட நெளிந்து
பல பொறிப்படந் தரைபடப் பணிந்துபின் பகரும். (10)

கோல வார்கழற் குரிசில்நும் மடிக்கொழுங் கமலத்
தால னேகமென் போலஃ றிணைக்கொடுஞ் சாதி
சீல மேவிய பதமுறு மென்பனைத் தெளிந்தெக்
காலங் காண்குவ னெனக்கிடந் தனனெடுங் காலம். (11)

பிறந்த நாட்டொடுத் திற்றைநாள் வரைக்குநம் பெயரை
மறந்தி ருந்தகா ளறிகில வினைக்கிலென் மனத்தி
விறந்தி டாமுன மின்றுநண் டிடும்பல னெனைப்போ
லறந்த வம்புரிந் தவர்களும் பெறுவதற் கரிதால். (12)

ஆதி நாயகன் றிருவொளி யினிலவ தரித்த
வேத நாயக மேபுமைக் கண்டதால் விளைத்த
பாத கம்பல தவிர்த்துமுற் பவங்களை யறுத்துத்
தீதி லாதநற் பதவியும் படைத்தனன் சிறியேன். (13)

என்று கூறியிம் மலரடி யிணையினை யெளியே
மென்று காண்குவ மோவென வயர்ந்துடைந் தெண்ணி
யென்று மின்றுபோற் காண்குவ மெனமனத் திருத்தி
யென்றுந் தீன்பயிர் விளங்குற வாழியென் றிசைத்தே. (14)

பணி பணிந்தெனக் கெவைபணி விடையெனப் பகர
வணி யணிந்தெனச் செவியுறக் கேட்டதி ஜுபித்து
மணி கிடந்தொளிர் புயவரை விம்முற மகிழ்ந்தார்
திணி சுடர்க்கதிர் வேல்வல னேந்திய திறலோர். (15)

கொடிய ஜூதர்கள் வன்னகை முன்றியின் குலத்தோர்
நெடிய காரண மெனமுகம் மதுதமை நெகிழா
திடியி னிற்பணிந் தாசரித் தாசனத் திருத்திக்
கடிதி னம்பொரு ளிவையெனக் கணக்குடன் கொடுத்தார். (66)

காம்பொருத்துபடலம்-முற்றிற்று.

ஆகப்படலம்-19-க்குத் திருவிருத்தம்-966.

---

## ஊசாவைக்கண்ட படலம்.

மிக்க செம்பொனீய்ந் தவர்க்குநன் மொழிபல விளம்பிப்
புக்கிருந் தவ்ருட னெழுந் தகன்றுபொன் றிகழ்த்
தக்க மாமணிக் கதிர்விடு மறுகினிற் சார்ந்தோ
ரக்கசாலையி னிடத்துவந் திருந்தன ரன்றே. (1)

நெருப்பு குத்திடுந் தெறித்திடுஞ் சுடுஞ்சுடு நெறியி
ரிருப்பி டந்தவிர்ந் தெழுமெனத் தபதிய னிசைப்ப
வொருப்ப டத்துணுக் கெனப்புறத் தொதுங்கின ருழையோர்
விருப்ப முற்றிருந் ததிரகு மதுவிளக் கினரால். (2)

தோற்ற நம்மிடத் தலதுவே றிலைச்சுடுங் கனலை
யகற்றும் பேற்றியா னுமதிடத் தடைகுவ தலது
வேற்றி டம்புகா புக்கினு மெய்யினில் வெதுப்ப
ஆற்ற மின்றதற் குறுகுணந் தானுமின் றெனவே. (3)

மெலிவி லாதசொற் கேட்டலும் கம்மியன் வெகுண்டவ்
வுலையி னிற்கரும் பொன்புகுத் துமியொடு கரியும்
பொலிய வைத்தெரி மூட்டினன் புகைபிருட் படல
மலிந சக்கனல் கொழுந்துவிட் டெழுந்தது வளர்ந்தே. (4)

உருகி வெந்தவல் லிரும்பினை யுலைமுகத் தெடுத்துக்
கருகு மேனியன் கட்கடைக் கனற்பொறி கதுவ
வருகி ருந்தெழுந் தங்கைகள் செவப்புற வடித்தான்
பெருகு மக்கினிக் கொழுந்துக டெறித்தது பிதிர்ந்தே. (5)

முன்னுளுற வெனவோதிய முதியோன்முக நோக்கி
யென்னுருயி ரனையீரும திடுபேர்சொலு மெனவே
மன்னுகிய மைசறுசொல் மறையோனு மகிழ்ந்தே
யொன்னாரி யேயென்பெய ரூசாவென வுரைத்தான். (22)

வேறு.

உரையினி லுறவு குலவலிதென் றாசா வுரைத்தவை யுளத்தினிற் குறித்துக், கரைவழிந் தொழுகு மகிழ்ச்சியாய் மைசறு கருங்குழற் செவ்விதழ்க் கனிவாய்த், திருமொழி யுரைத்த திவனெனக் கருதிச் செவ்வியோன் முகமதை நோக்கிப், புரையற நமக்குச் சொல்வதொன் றுளது கேண்மினென் றன்பொடு புகல்வான். (23)

குறைஷியங் குலத்துக் கொருமணி யெனவுங் குலவலியதுக் கிரு விழி யெனவு, மறைநிரைக் கடலி லமுதெனப் பிறந்த வரிவையர்க் கணியெனுங் கதீஜா, நிறைமதி மடியிற் றவழவுந் துகிலிற் பொதியவு நெறிபடுங் கனவி, னுறைபடும் பொருளை யுணர்கெனச் சலாமு மோதி னருமக்கென வுரைத்தான். (24)

அம்புய வதனன் குலவலிது வருந்து மருந்தவந் திரண்டொரு வடிவாய்க், கொம்பென வொசிந்த நுண்ணிடைக் கதீஜா குறித்திடுக் கனவினைத் தேர்ந்து, கம்பிதஞ் செய்து கருத்தினுண் மகிழ்ந்து காரண புதுமைக ளனைத்து, மின்பரின் விளங்க மைசறு மகிழ வினிதுற வெடுத் திசைத்திடுவான். (25)

அகிலமுந் திசையுஞ் சுவனமும் விளங்க வணிதிகழ் மக்கமா நகரின், முகம்மதென் றதித்துத் தீன்பயி ரேற்றி மறைவழி தவறிடா நடத்திப், பகாரு நபியாய் வேதமு முடைத்தாய் வருவரென் றறிவுளோர் பகர்ந்த, நிகருங் குரிசி லிவரல்லர் லிந்த நீணிலத் தினியிலை யெனவும். (26)

கலைநிறை மதியாய் மடியிசை யிருப்பக் கனவுகண் டகமகிழ் கதீஜா, நிலையிசை யிவர்க்கே மனைவியா யிருக்கி னீணிலம் புரப்பது தவறில், குலமிகப் பெருகுஞ் செல்வமும் வளருங் குறைவிலாப் பதவியும் பேறு, மலகிலா தடைந்த தென்னவு முரைத்தே னெனவரி வையர்க் குரை யென்றான். (27)

மறைதெரி யறிவு னுரைத்தசொற் கேட்டு மைசறு மனமிக மகிழ்ந்து, நிறைபதி தனைவிட் டிற்றைநாள் வரைக்கு நிகழ்ந்த காரணமுள

றிவீற்றார், செம்மலிளங் களிறனை முகம்மதையென் மருகவெனச்செவ் விதாக்கி, வம்மெனமற் புயத்தபூசா தமையனுப்பி யினிதிருந்தார் மதி வல் லோரே. (53)

நினைத்தபடி முடிந்ததென மனத்தடக்கி யெழுந்த மூசா நெறியி னேகிச், சினத்தடக்கை மலையெனவுட் களிப்புமத மொழுக மணித் தெருவு நீந்திக், கனைத்தகடன் முகட்டெழுந்த கதிர்கடுப்ப வருவது கண் கவர நோக்கி, யினத்தவர்முன் னவிர்தய முககமல நகையினொடு மிலங்கிற் றன்றே. (54)

முன்னவர்தம் முன்னேகிப் பின்னவருமிருகரங்கண் முகிழ்த்துத் தாழ்த்துத், தங்கிதய மலர்மொழித்தே னுவழியேயொழுகியவர் செவி யிற் சார, மன்னவர்மன் குவைலிதுதம் மருங்கிருந்து மணமொழியின் வரலா றெல்லாஞ், சொன்னதுவு மவர்மறுத்துச்சொன்னதுவும் விரித் தெடுத்துச் சொல்லி னாரால். (55)

திருத்தினைவ ருரைத்தமொழி யபித்தாலிப் கருத்தூடு திளைப்ப வூறலின், பெருத்தகுலத் தவர்கோதிக் குறைஷிகளின் முதியோரைப் பெரிது கூட்டிப், பொருத்தமிது கலிநைத்தின் முகூர்த்தமிது வருக வெனப் பொருவி லாத, குருத்தவள மணிமாலைக் குவைலிது பாற் குறித்தெழுந்தார் கொற்ற வேந்தர். (56)

ஆரிதுகு தம்சுபைறு அப்துல்கஃபா அபூலகபு கைதாக்குக், காரேயும் விறுறப்பா சுடன்ஹற மூசா வுடனேமு கைறு தானுஞ், சிரோறு மபித்தாலிப் அப்துல்லா மதலையெனுஞ் செவ்வி யோர்க்குத், தாரோறு வதுவைமொழி பகரவரும் வரலாறு தன்னைக் கேட்டான். (57)

அருமறைதேர் குவைலிதுகேட் டகத்திலடங்காவுவகைப் பெருக் கா நந்த, மிருகரையும் வழிந்தகடற் குளித்துநடு வெழுந்துமிதந்தெதி ரே புக்குத், தருவனைய அபுத்தாலிப் தம்முடனே மன்னவர்கடமையும் போற்றித், தெரிசுதிரா சனத்திருத்தி யனைவருக்கு முறைமுறையே சிறப்புச் செய்தார். (58)

சொல்லரிய காரணத்துக் குறும்பொருளாய் நமர்க்குயிராய்த்தோன் றித் தோன்றுஞ், செல்லுலவுகவிகைநிழல் வள்ளலுக்கு மணமுடிக்குஞ் செய்தி யாச, வல்லமைஹா ஷிம்குலத்துக் கனைவோருங் குறைஷிகளு மகிழ்ச்சி யாயென், னில்லிடத்தில் வாழுதனுட்கிடையாத பெருந்தவஞ் செய் திருந்தே னென்றார். (59)

டைப்படிதல் கண்டுதீனிலை பகைத்த பாவிகளை நகைத்தனர். (95)

பிடரின் மீதுசுமையும் சஜூதியல் பிரிந்திடாதவ னுறைந்தது, மடைய லார்கணைகை யோடுநின்றது மகம் வெதும்பவொருகாளைகண், டிடைய றுதவசை கொண்ட பாவிக ளிழைத்த பாதகமி தென்னவே, யுடைய நாயனைபி புதல்வி தம்பிட மொதுங்கி நின்றிவை யுரைத்தனன். (96)

மாத ருக்கரசு பாத்தி மாவெனு மடந்தை கேட்டுளமயக்குற, வீதி வாயிடை புகுந்து பின்னென நடந்து மாமறை விளக்குடுங், தாதை தெந்திட மிருந்த தைச்சிதறிச் சரிவ ளாக்கைகொடு தனிதுடைத், தேத முற்ற மொழி காமி னைச்சிறி தெடுத்து ரைத்துமனை மேவினர். (97)

ஏக னைத்தொழு தெழுந் திருந்துமி னிடும்புசெய் தவரை நோக்கி வே,மோக முற்றதனி றப்பணு வனது மூனிவிஞ ரிவர்க டங்களை,வேக முற்றகொடு நரகிடைப் புகுத விடுதல் வேண்டுமென விளம்பினன்,மாக நோக்கியிரு கரமெடுத்துபது வாவுரைத்துநமி போயினர். (98)

வேறு.

வீ றுனை பகர்ந்து பிடிப்புக டொடுத்தும் வெவ்வினைக் கொடுங் கொலை நினைத்துங், காணிலாப் புதுமை விளைத்தநாயகத்தைக் காயிர்கள் வெறுத்திடுங் காலந், தூணினைத் துரும்பா நினைத்தென ஹாவின் றேன்றனில் அக்கமென் றொருவன், பூணிலாப் பவநோய் பூண்பது தனக்கே பொருவிலா தொருதொழி லெடுத்தான். (99)

இருவழி கருப்பு மொருபுறத் தொதுங்க விதழ்கடை வாயிடைப் பிதுங்கத், திருகுற முகத்தைச் சுரிப்பொடு வளைத்துத் திகழ்தரு நாசியைச் சிலுர்த்துப், பெருகிய கழுத்தி னாம்புகழ் விறைப்பப் பிளந்து வாய் நாநுனி புரட்டி, வரிவர வலித்து முகம்மதை நோக்கி மனத்துறு திகழ்ச்சிசெய்தனனால். (100)

கதிர்விரிந் தொழுகு மெய்யெழி லயிலைக் காண்டொறுங் காண்டொறும் வலித்திட் டெதிரெதிர் வருவன் விலக்குதற் கமையா னிங்ஙனஞ் சிலபக லிரிந்தான், புதியவன் றாத ரிவன்றனை நோக்கிப் பொருவிலாச் செல்விதழ் திறந்து, பதிபெற வலித்திட்டிதனிலென் மடங்காய்ப் பழிப்பெறுங் கிரிகுளை யென்றார். (101)

வே று.

தேந்தரு மினியசொற் செவ்வி நங்கயி
யர்ந்தசொ லுணர்ந்திசு லாத்திலாகிய
மாந்தரைப் பிடித்தக மறுக்க முற்றற
வீய்ந்திட விடர் பல விளைத்திட் டார்களே. (121)

வீசுவர் சிலர் தலை விடுத்து நன்மொழி
பேசுவர் சிலர்தலைப் பிடித்துப் புன்மொழி
யேசுவர் சிலர்தலை யிரண்டு பட்டுறும்
பூசலுக் கடிப்படை புணர்த்து வார்சிலர். (122)

மாயவன் முகம்மது வகுத்த மார்க்கத்தி
லாயின னிவனென வடுத்தம் மாறையுங்
கூயவன் றந்தையா சிறையுங் கோதிலாத்
தாய்சுலை யாவையுந் தமக்கை தன்னையும். (123)

பிடித்தனர் சினத்தொடிங் நான்கு பேரையு
மடித்தன ரிருகா மழுந்த வங்கமுந்
துடித்திடக் கயிற்றினிற் சுருக்கிப் பாதலம்
வெடித்திடச் சுடும்பரல் வெயிலி லாக்கினார். (124)

ஏங்குவ ரிரங்குவ ரிருக ணீர்விழத்
தேங்குவ ரடிக்கடி தீனை மாறியு
நீங்குவ தில்லென நினைந்திட் டுள்ளகம்
வீங்கிட நெட்டுயிர்ப் பெறிந்து வீழ்குவார். (125)

தங்கிய கதிரவன் றழலின் மெய்யொளி
மங்கியுள் ளீரலும் வறந்து தீய்ந்திடப்
பங்கிகள் பூழ்தியிற் பதிய முட்டிய
வங்கியிற் கிரியொத் தறிவு போக்கினார். (126)

வேனலிற் கிடந்துடல் வெதும்பிச் செவ்வரி
பானலத் தருவிநீர் பாப்பி யுள்ளுடைந்
தூனென வியர்ப்பெறிந் துதிர நங்கயி
தீனிலை மறுத்திலர் செவ்வி யோர்களே. (127)

உறுக்கினார் செழுங்கர முரத்தொ டொன்றவே
பிறுக்கினா ரடிக்கடி யெடுத்த தீவினை
முறுக்கினா ரல்லது முட்டுந் தண்டனைக்
குறுக்கினா ரிலைக்கொலைக் கொடுமை யாளரே (128)

பேறு மிதுவே கிடைத்ததெனப் பெரியோ னுதி தனைப்புகழ்ந்து
நீறுங் களிப்பா னந்தமன விழைவாற் றக்கு பீறுரைத்தார். (91)

வல்லோ னபியுங் கலிமாவை வகுத்துக்காட்டி முன்னுரைப்பச்
செல்லேர் காத்தா ருமறுகத்தாப் செப்பி யிசலா நெறிதேக்கி
யல்லார் குபிரைக் கடிதகற்றி யழியாத் தொழுகை முறைபடித்து
நல்லோர் பரவும் படிவணங்கி நறுந்தீ னடுக்கந் தனைத்தவிர்த்தார். ()

விரியுங் கதிர்பெய்ச் சிறைத்தடங்கண் விண்ணோர்க் கரசர் பொருப்பினிருந், தருவி யெனச்செய் திடுங்கலிமா வடங்கா நதியின் பெருக்காக்கிச், சுருதி மொழித்தீன் பயிர்தழைப்பச் சுற்றுங் குபிர் வெங்களை தீய்க்கும், குருவி னெறியான் மனக்களிப்புக் கொண்டா ரீமான் கொண்டாரே. (93)

விதியின் முறையென் றதுமதுதாம் விளக்கு முரைகேட் டுமறுகத்
தாப், மதிமெய் மயங்கிவெஞ்சனையின் மாயத் துறைந்தா ரெவரும்
பதியும் பெருக்க வுரைநடத்திப் பற்று ரிவரொன் றபூஜகல்தன், புதி
யமொழியைத் தொல்கிளைக்குப் புகழ்ந்தானபியை யிகழ்ந்தானே. (94)

சரியுந் திரைமுத் தெறிந்திரைக்குஞ் சலதிக் குபிரி னிடையினடு
விரிய மமுத மெனுங்கலிமா மேலோ ரொருமுப் பஃதுடன்மூன்
றறிய மகடூ வுறுவருமா றரச ரொருவ ரவனியினிற்
றெரியு மிலக்க மிந்நான்கு பதின்ம ருடனுஞ் சிறந்திருந்தார். (95)

உமறுகத்தாபீமான்கொண்ட படலம்-முற்றிற்று.

ஆகப் படலம்-4-க்குத்-திருவிருத்தம்-357.

## உடும்புபேசிய படலம்.

வடிவுறு புமறெனும் வள்ள னக்கபி
யுடனுயர் தீனிலைக் குரிய ராயபின்
றிடமுடைத் தவர்களாய்ச் சிந்தை யிற்பெறு
படமக றாப்பெரு மகிழ்ச்சி யெய்தினர். (1)

செயிரறுந் தீனிலைக் குரிய செவ்விய
டயிபொ ன வருங்கலி மாவைப் பண்பொடு

குலத்தினுக்கு மாசருக்கு முதியோர்க்கு மறையோர்க்குங் கோதி
லாதித், தலத்தினுறை குபலெனுமத் தம்பிரான் றனக்குமெந்தச் சமயத்
தோர்க்கு, கலத்தகைமைத் தலக்கேடும் பிறர்சூடும் பெரும்பகையு நட
வா முன்ன, மிலத்தொடொழு கினத்தொடுறைந் திவை வயிர்வெண்
ணிணம்பருகி யிலங்கும் வேலோய். (13)

தந்தைதாய் தமர்வணக்க முறையொழுகிப் பழையமறை தழுவி
னீரேல், வந்தமா வினைநீங்கு மினத்தோர்க ளெவருமன மகிழ்ச்சியாகிக்,
கந்தடர்வெங் கரியிரதம் பரிநெருங்கப் படைசூழக் கவிகை யோங்க, விந்
தமா நிலத்தரசா யிறைஞ்சுவது சாதமென வியம்பி னானல். (14)

அச்சமனு விலதகத்தி னுத்துபா வுரைத்தமொழி யனைத்துங்
கேட்டு, முச்சகமும் புகழ்முகம்ம தறசூல்தம் மிதழினிற் புன்முறுவ
ரேன்றி, விச்சையெனத் தெளிந்துபல பலசூழ்ச்சி விரித்தறத் தைவி
ளங்கி யென்னே, டிச்சைபெற வுரைத்தனைநன் கியானுரைத்தல் கேட்டி
யென விசைக்கின் றாரால். (15)

எனக்கிறையோ னுரைத்தமறை மொழிவசனந் திறத்ததல வென்
னக் கூறல், மனக்குனறயோ வலதுனது மதித்திறனோ வறிகிலன்மும்
மறையுந் தேர்ந்தோய், கனக்கமொழி யென்றெடுத்துக் காட்டுகநீ யென
துமொழிக் கவினைப் பின்ன, ருனக்குரைப்பக் கேட்டுமொழித் திறனறி
யென் றெடுத்துரைத்தா ரொளிரும் பூணர். (16)

தாளவொளி தனிலுருவா யுதித்தமுகம் மதுவிதனைச் சாற்றக்
கேட்டுப், பெருகுமுதன் மறைவசன மெவ்வுலகு மறிவதியான் பேசி
லென்னே, யிருமையினுங் கதிதருதும் புதுமொழியை யெனதுசெவிக்
கிசைவ தாக, வுரையுமென வெடுத்துரைத்தா னிறபியா தரும்புதல்வ
னுத்து பாவே. (17)

ஆதிதனை யுளத்திருத்தி பிசுமிலெனு முரைதிருத்தி யமுத முறும்,
வேதமெனும் புறக்காணி லொருசூறத் தெடுத்தோதி விரிவதாகப், யோ
தமுறு முபணிடதப் பொருளனைத்துந் தொகுத்துரைத்தார் பொருவி
லாத, சீதரவொண் கவிகைநிழ றனிலுலகம் புரந்தளிக்குஞ் செவ்வி
யோரே. (18)

இரவியெனுங் கவிமாவிற் குபிர்த்தியிர மடர்த்தெரியு மிறசூ
லில்லா, தெரிமறையி னுரைகேட்டுப் பொருடேர்ந்து பகுப்பவதி

ஜாபித்து நோக்கி,புருகிமதி மயங்கியெதி ருரையாம லூமனென வொடுங்கி வான்றோய், பெருவரையின் மடங்கலெதிர் வரையாடு நிகர்வதெனப் பேதுற் றானே. (19)

அலங்குளைவா லரியேறு முகம்மதுநா விற்பிறந்த தன்றித்தீஞ் சொல்லிலங்கமா ரிறைமொழிகேட் டிவர்க்குரைத்த தறுதியென விதயத் தோர்ந்து, கலங்குமனந் தெளிந்துநபி கமலமலர் முகநோக்கக் கண்க ணாணி, விலங்கினமொத் தெவரோடு மொழியாது தனியெழுந்து விரை விற் போனான். (20)

கலைமறைதேர் முகம்மதுட னுரையாம லெழுந்துதலை கவிழ்ந்து நாணி, நிலைமையட லறிவகன்ற நெஞ்சினொடும் புலம்பிநெடு மூச்சிற் சோர்ந்து, சிலைவயவர்க் கெதிருரைப்ப தென்னெனச் சஞ்சலத்தினடுத் தியங்கி வாடிக், குலைகுலைந்து குலத்தவரு மபூஜகுலு மிருந்தபெருங் குழுவைச் சார்ந்தான். (21)

உத்துபாவந்த படலம் முற்றிற்று.

ஆகப்படலம் 6-க்குத் திருவிருத்தம் 418.

## ஹபீபுமக்கத்துக்குவந்த படலம்.

உள்ளறிவு குடிபோக்கி யிருந்தவன்றன் முகநோக்கி யுரவநீ யவ், வள்ளலிடஞ் சென்றதுவு மிருந்ததுவும் நிகழ்ந்ததுவும் வகுத்துக் கூ றென், றள்ளிலைவே லவர்கேட்ப முகம்மதுசொற் றெதிராக வமரா னும், விள்ளரிதிந் நிலத்திலெவ ரெதிருரைப்ப ரெனுமொழியை விளம்பி னானே. (1)

அரிவலப்பும் புயவிடலை மனமயக்குற் றுரைத்தவைகேட் டறிவின் மாந்தர், பெருகுமைந் திணைச்சாதி யுளமனைத்தும் பேதுறுத்திப் பெட்பி னோடு, முறைதரச்செய் தவரிவரை நிலைமாறச் செய்பவனிவ் வுத்து பாதன், றிருமனத்தைப் பேதுறுத்த லவற்கரிதோ வெனநகைத்துச் செப்பி னாரால். (2)

கனைத்தமுராட் கரிங்கர்த்த வுத்துபா கலங்கியகட் டுரையு நோர்ந்தன், றினத்தவர்க ளுரைத்ததுவுஞ் சாதமெனச் சிரந்தூக்கி யெணித்தேர்ந்து,

அகலிடம் விளக்குஞ் செங்கோ லணிமணித் தீப மேநேர்
புகலுறும் மறையுந் தேர்ந்த புந்தியிற் கடலே நாளு
மிகலுடை யாசர்க் கெல்லா மெதிரிடி யேறே வானுஞ்
சகமுமெண் டிசையுந் திக்கும் வெண்புகழ் தடவும் வேந்தே. (4)

மறுவற வுலகி னில்லா வயதொரு நூற்றின் மேலு
மறுபது மிருந்தோய் நுந்த மறிவினு லறியா தில்லைச்
சிறியவ ருரைத்த தல்லாற் செவியினுந் தெரிவ தாருங்
கறையற விற்றைப் போதிற் கண்ணினுங் காண்டி ரென்றார், (5)

ஓலையுந் தா[illegible]மியாங்க ளுரைத்தது முசம்மதென்போன்
பாலினின் [illegible]மராணி னூறு பங்கினி லொன்றுங் காணு
தோவிடுஞ் [illegible] டன்மாச் சேனை யுரவனென் றுரைப்ப மூன்று
காலமுங் [illegible]ரிந்து நோக்குங் காவலன் செவியிற் கொண்டான். (6)

உரைத்த[illegible]வ் வசன மெல்லா முள்ளுறப் பொருத்தி நாளை
வரைத்தடப் [illegible] புயத்து வீர முகம்மதை விளித்து மார்க்கம்
பொருத்தறப் [illegible]கன்ற செய்தி யறிகுவ மிற்றைப் போதிற்
றிருத்தகு [illegible]ன் கண்ணே யாவருஞ் செல்க வென்றான். (7)

அரச[illegible]ர வரவர் மனையிற் சார்ந்தார்
கரை[illegible]மேலைக் கடலிடை கனலி சார்ந்தா
னிரவினை[illegible]யு மெழின்மணித் தவிசின் மீதிற்
குரவர்கண் வி[illegible]லிரைசக் குணகடல் வெளுத்த தன்றே. (8)

விடிந்தபி [illegible]ன்று டெனும்விறற் பதியின் வீர
ரிடந்தரு [illegible]வங்கைக் காண்பதற் கெழுந்தர் வெற்றிப்
படர்ந்தரு [illegible]ஆண்டிற் பகைப்பெருங் கடலைக் கையாற்
கடந்தவே [illegible]லீபு கலன்பல வணிவ தானார். (9)

வையகம் புரந்து [illegible] வளர்த்திடு மிபுறு கீந்தம்
கைமொளி யுலைச்செ[illegible] கையா லணையினிற் கவினச் சேர்த்தித்
துய்யவன் றூதர் முன்னுந் தோன்றிய ஆத மென்போர்
மெய்யணி குப்[illegible]த்தை வியன்பெற மெய்யிற் சேர்த்தார். (10)

கருவிமெ[illegible]ற் றீண்டாக் காரண ரிசுமா யீல்தஞ்
சருவந்து [illegible]த்தித் தாரணி தனிற்பொன் னூட்டு
மருமலர் ப[illegible]ங்கி வளர்நபி சீதுமெய்யிற்
றருகதி ரு[illegible] தனையெடுத் தணிந்தா ரன்றே. (11)

சூலினைத் தரி[illegible]டற் சுகைபுநன்னபிதஞ் செம்பொற்
காலினைக் கபு[illegible]கழலடி பொருந்தச் சேர்த்திச்

கண்ப டைத்தவ ரிவரெழிற் காண்பவர் முகத்திற்
புண்ப டைத்தவ ரிவர்தமைக் காண்கிலார் புதியோன்
பண்ப டைத்தசொன் மறைநபி பதம்பணி யாதார்
மண்ப டைத்ததிற் படைப்பல ரெனச்சிலர் வகுப்பார். (90)

அண்டர் நாயக முகம்மதின் காரண மனைத்துங்
கண்டு நல்வழி யொழுகிப்பொன் னுலகுறை விலையாய்க்
கொண்டு போவதற் கடைந்தன மெனச்சிலர் குழுமி
விண்டு மெய்யுள கெழக்களிப் பொடும்விரித் துரைப்பார். (91)

உறுதி யாநம தாசபு ஜகுலுரை கேட்டு
மறுகும் வெம்பகை விளைத்திடி லனைவரு மதியா
தறுதி யீதென வாசுட னபுஜகல் தனையுந்
தெறுத லேதுணி வெனச்சிலர் தெளிந்துசெப் புவாரால். (92)

முகம்மது தமக்கிடர் செயத் திமஸ்குமன் னவனுஞ்
செகத லத்துறை மன்னவ ரடங்கலுஞ் சினந்தே
யிகல்பொ ரத்துணிந் தெதிரினு மிருங்கதிர்ப் பனியா
யகல்வ தல்லது முடிவதில் லெனச்சில ரறைவார். (93)

ஈத லாற்சில வுரைபிறர் தாத்திமஸ் கிறைவன்
காத லான்முகம் மதுதிருக் கவின்முக நோக்கி
மூது ரைத்தெளி விறுமறை யினுமுதிர் மொழியாய்ப்
போத ரத்தொடும் புகழொடு மிதத்தொடும் புகல்வான். (94)

வரிசை ஹாஷிமென் குலத்தினி லுதித்தமா மணியே
தரும லர்ப்புய அப்துலலா தருதிரு மகவே
யிருநி லத்தவர்க் கிசைந்திட வெனதுளத் திருந்த
வுரையி னிற்சில கேட்டியென் றினிதெடுத் துரைப்பான். (95)

தந்தை தாய்தமர் தம்வழி யொழுகிலா ததுவு
மெந்த ஞயக ளொருவனுண் டென்றது மெழிலா
யந்த காளையின் வருங்குப லினைப்பழித் ததுவும்
வந்த தென்றனக் கருமறை யெனவகுத் ததுவும். (96)

* நபியு காவலா வினியிலை யெனநவின் றதுவும்
புவியு ளோர்க்கெலா மொருகவி மாவெனப் புகன்று

* அனைத்து மென்பதில் நபியுகாவலா லென்பது பழைதலானுந் தொழிலென்றது பயனில கொள்ளாமையானு மென்றுணர்க.

துடலைவநன் மலரைத் தூற்றுந் தூய்நிழ லிடத்தை நீந்திப்
படர்முகிற் கவிகை யோங்கப் பாருள தெவையும் வாழ்த்த
வடவரை யனைய திண்டோள் வயவர்க ளினிது சூழக்
கடிமனை யிடத்திற் புக்கார்ஹபீபிறசூலு மன்றே, (72)

மானுக்குப் பிணைநின்ற படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 12-க்குத் திருவிருத்தம் 883.

---

## ஈத்தங்குலை வரவழைத்த படலம்.

சுருதியின் முறைவழித் துணைவர் சூழ்தரக்
கருமுகி னிழலொடுங் கருணை பொங்கிட
மருவுமெண் டிசைக்குமான் மதங்க மழ்ந்திட
விருநிலம் புகழ்நபி யிருக்கும் போதினில். (1)

காவினிற் கபுசுமோர் கையிற் குந்தமு
மேவிடுஞ் சட்டையும் விசித்த கச்சையுந்
தோலொரு தோளினுந் தூக்கி வந்தவ
னுலகந் நபிதமை யடுத்து நோக்கினான். (2)

தரியலர்க் கன்புறுஞ் சார்பினான் மறைக்
குருநெறி முகம்மதைக் குறித்தெ திர்ந்துநீ
ரிருநிலத் தெவரென வியம்பினான்பா
ருரநெறிந் திடச்செவி வுழுக்குஞ் சொல்லினால். (3)

அச்சமொன் றின்றிநின் றறபி கூறலும்
வச்சிரப் புயமுகம் மதுதம் வாய்திறந்
திச்சகம் புகழ்தனி யிறைவன் றூதியா
னிச்சய மிதுவென நிகழ்த்தி னாரரோ. (4)

ஆதிதன் றூதென வறிவ தற்கரும்
பூதலத் தென்மனம் பொருந்தி யன்பொடுஞ்
சாதமுற் றிடப்பொருஞ் சாட்சி யாமெனுங்
கோதறு குறிப்பெவை கூறுவீரென்றான். (5)

வேறு.

வாருதி யெனவரு மதீன மென்னுமவ்
வூரவர் சமர்க்குயிர்த் துணைவராகிய
பேரொனப் படைத்தனம் பெரிய ஞலென
வேர்பெற நபிமன மகிழ்ந்தி ருந்தனர். (27)

பின்னுதிரைக்கடனிலத்தில் விளங்குபுக மூசைனபினர்பெரும்பே ருன, மன்னவர்மன் னபுல்காசி மனத்தினுசா விஜுமறவா திருத்தி வாழ்த்து, மின்னவிர்செம் மலர்ப்பதத்தான் முகம்மது தம் பெருமறைத் தீன் வேர்விட்டோடி, யெங்கிலமி மிசுலாத்தின் கொழுந்துபல படர்ந்தேறி யிலங்கிற் றன்றே. (28)

உலகடங்கத் தனியரசு செலுத்தும்பெரி யவனருளா லுயர்வானீந்தி, யலகில்கதிர்ச் சிறைச்சபுற யீலகுமதுறைந்தகுவ டடுத்தன் பாக, விலகுகவி மாவோதி மணித்துகில் செங்காத்திருத்தி வேதமீந்து பலாறிய நபியெனும்பேர் பரித்தாண்டு மிருநான்கும் படரு நாளில். ()

இறுமிகட்கும் பாரிசு நாட் டவர்க்கும்பெரும் பகையாகவிருந்தவ் வாண்டு, பறபு திர்ந்து பாரிசவர் வெற்றிகொண்டா ரெனும்வசனமக்கமீதி,லுறையும்பெருங் குபிரவர்கேட் டிடற்பூரித்திசுலாத்தி லுற்ற பேரைத், திறனடுத்த தெமர்க்கிழிந்த சிதைவடுத்த துமர்கெனவுஞ் செப்பினரால் (30)

தருவைநிகர் முகம்மதுநன் னபியுரைத்தா ருறுமிகடஞ் சமர்க்காற்றுது, வெருவியிரு நிலத்தோடிப் பாரிசற மூறியுமென விரித்த வாய்மை, யொருபொழுதும் பழுதாகா தென்னஅபூ பக்கரெடுத் துரைப்பக் கேட்டே, யிருமையினும் பலனறியா னிபுனுகல பெனுமவன்வந் தெதிர்ந்து சொல்வான். (31)

எங்கள்குலத் தவருரையே பழுதாகிப் பாரிசவ ரிரிந்தா ரென்னி, லுங்கடமக் கருள்வேனு றொட்டகையீ தொட்டமென வுரைப்ப நோக்கி, யெங்கணபி முன்னுரைத்த வுரை தவறி யுறுமிகள்போ ரிடைந்தா ரென்னி, லுங்கடமக் களித்தலஃ தென்ன அபூபக்கரெடுத் தோதினுரால். (32).

இருவருஞ்சம் மதித்திகலி யொட்டியவொட் டகத்தினெடு மிருக்கு நாளி, லொருகவிகை நிலவவுறா மிகளடர்ந்துபாரிசவ ருடைந்தா ரென்னப், பெரிதுமொழி வபரவர்கேட் டிபுனுகல புடனுரைப்

பப் பெரிதி னீந்தா, னருவரைநே ரொட்டகநூ றடலரியே றென்னும
பூபக்கர்க் கன்றே. (33)

ஒட்டியொட்டம் பலித்த வொட்டைத் திரளொடும்வந் துபரு மப பக்கநோக்கி, மட்டவிழ்ந்தின் புயக்குரிசின் முகம்மதுதம் முனம்விடுப்பூ மகிழ்ந்து நோக்கிக், கட்டியபொன் மதிட்கருபா நகரிடைவெங் குபிரார் மனங் கருகி வாட, விட்டமுடன் சதக்காவென் றிரப் போர்க்கும் வறிஞோர்க்கு மீந்திட் டாரால். (34)

அன்பரா முகம்மதுவுக் கரியநபிப் பெயர்வானோர்க் கரசரீந்த, வொன்பதாம் வருடம்வரை யளவுமுயர் கருபாவி னொருங்கு தூக்கி, வன்பரா யெகுறைஷிக் காபிரிடு மொப்புமுறி வசனமியாவு, மின் புரு நின்றசித லரித்ததெனப் பெரியதந்தைக் கியம்பி னாரால். (35)

அரசாட லரியகு மதுரைத்தமொழி யபித்தாலி பகத்தி னோர்ந்து, கரிசமிடும் குலக்காபிர்க் குரைப்பவதி லவர்மனக் கறுப்பு நீக்கி, விளைவினொடு மொப்புமுறி தனைக்கிழிப்ப வரும்போது வெகுண்டு கூறி, யெரியிடைநெய் யிட்டதெனச் சிலகாபிர் தடுப்பமன மியைந்தி லாரே. (36)

சாதிவிலக் கொப்புமுறி பரிகரிக்கும் வார்த்தைசெவி தடவக் கேட்டுக், காதியெழுந் தபூஜகல்கண் செவந்துமனங் கறுத்துமுகங்கடுத்து நோக்கி, மோதுதலுங் கேளாது கருபாவிற் றூக்கிவைத்த முறியை வாங்கிப், பேதமறப் பார்ப்பளவின் முன்னெழுது மெழுத்திலொன் றும் பெற்றி லாதே. (37)

அல்லலறச் சிறந்தவரி யல்லாவென் றொருபெயரி னளவேயன்றி, யில்லையெழுத் தினியிதனா லிருந்துபல னென்னெனவு மெழுதுநாளிற், பல்லருட னியான்பொருத்த மிலையெனவு மெடுத்தோதிப் பலருங் காண, வொல்லையினிற் கிழித்தெறிந்தான் சாதிவிலக் கெனும்பெயர் விட்டோடிற் றன்றே. (38)

இன்னிசைநன் மறைமுகம்ம திருக்கலிமாத் தனை விளக்கி யிருந் தோர்க் கெல்லா, மன்னமருந் திடநீருப பங்கியளி யாதவரோ டடுத்தி டாமற், சொன்னபடி சாதிவிலக் கொப்புமுறி யெழுதினமன் கூறு வென்போன், றனிருகை வழங்காமன் மாருத பிணிபிடித்துத் தாழ்ந் திட் டானால். (39)

ஒப்பெழுதித் தீர்ந்த படலம்-முற்றிற்று.

ஆகப்படலம்-14-க்குத்-திருவிருத்தம்-939.

துன்னிய திரைக்கடற் *றோழர் நாப்பணி
னந்நபி பதங்கனைப் †போன்ற நாடிய
மன்னவர் களிப்பினு ணோக்கு மாமுகப்
பொன்னிதழ்த் தாமரைக் காடு பூத்ததால். (20)

அல்லெனுங் குபிர்க்கச டறுத்துத் தீனெறி
யெல்லவ னெனவருந் தூத ரியாரையு
மல்லணி மார்புறத் தழுவி மான்மத
வில்லுமிழ் மேனியும் புயமும் வீங்கினார். (21)

இடா றத் தடைந்தமு காஜி ரீன்களு
மடலுறும் வேற்கையன் சாரி மார்களு
முடனுவந் தொருவருக் கொருவ ரவ்வயி
னிடனுறக் காந்தமு மிரும்பு மாயினார். (22)

வரிசிலைக் குரிசிலு மதீன மன்னருங்
கருதலர்ச் செருக்குமு காஜி ரீன்களுந்
தருவென வருமபூ பக்கர் தம்மொடு
மரியவ னருளொடும் புறப்பட் டார்களால். (23)

நீடியகற் றுவெனு மெல்லை நீங்கியோர்
பாடியுங் கடந்துதம் பரிச னத்தொடுங்
கூடிய பனீயமு றென்னுங் கூட்டத்தை
நாடியங் கொருநெறி நடந்து போயினார். (24)

---

* தோழர் கடலாக, நபி பதங்கனாக, முகம் தாமரையாக வென்னு முருவகமும், நந்நபி மரைமலரலர்த்தும் பதங்கனைப் போன்றாரென்பதுவமமும், முகத்தாமரை மலர்ந்த காரணத்தாற் பரிதியாயினாரெனவேதுவும், இதிற்காரியத்தைக் காரணமாக்கியது. "ஆக்கந்தானே காரணமுதற்றே" என்னுஞ் சூத்திரத்துட்கோ ளென்றுணர்க.

† போன்றவென்னு முவமவுருபு, இறந்தகாலத் தஃறிணைப் பன்மை விகுதியொடு குறிப்பு முற்றாயினையாய் நந்நபியென்னுங் குணத்தொகையாகிய வினைமுதலைக்கொண்டது, பூத்ததாலென்னும் மூன்றாம் வேற்றுமை, பதங்கனைப் போன்றவென்னு மார்க்கப்பொருள் கொண்டது. ஆகையால், உருவகம், உவமம், ஏதுவென்னு மூன்று பெயரின் அலங்காரமும் பெற்றது.

மணி யுதாபங் தனமும், விண்ணிலாக் கதிரின் கச்சின்மேற் படுத்தி விசித்தனர் திறல்வய வீரர். (116)

மாகத வரையிற் சங்கொடு மருவி வந்ததோ வளைந்தபைங் கடலிற், றிரைகொலோ வணிந்த சருவந்து கான்ற செவ்விகள் வழிந்தொழு கிய தோ, பொருவிலா வரிசைப் புலியலி மணத்திற் போர்த்திடும் பசியகஞ் சுகியிற், றாளவெண் மணியி னிரைநிரை வடங்க டயங்கொளி தர வணிந் ததுவே. (117)

வண்ணவொண் புயப்பைங் கஞ்சுகி யிடத்தின் வான்மணித் தாள மா லிகையின், வெண்ணறை மலர்மா லிகைபுனைந்தரிய மான்மதம் விதி ர்த்திடுந் தோற்றந், தண்ண றும் பசுங்கற் பகமல ரிடையிற் சாலிக டுளித் திடத் தலைந்து, பண்ணிசை யிழற்று ஞிறின மிருந்த பான்மையொத் திருந்தன மாதோ. (118)

அம்புய மலரிற் சேந்துசெவ் வரியார்ந் தருளடை கிடந்தகட் கடை யின்,வம்பவிழ் சுறுமா வுரைத்தமை யெழுதி மணிவடங் கிடந்தபொன் மார்பிற், கொம்பலர் மாவஞ் சங்தொடுங் குழைத்துக் குளிர்தாத் திமிர்ந் துகை விரலிற், பம்பிய திரைவா ருதியினிற் பிறந்த பருமணி யாழியுஞ் செறித்தார். (119)

அலங்கரித் தயினி சுழற்றிறு லவர்கட் கருநிதி மணியொடும் வழங்கி, யிலங்கிழை மடவா ரடைப்பைகோ டிகஞ்சாங் திநமருங் கினு மெடுத் தேந்தத், துலங்கிய கவரி வெண்ணிலா வெறியச் சுருதிவல்ல வர் துஆ விரப்ப, நலங்கிளர் நீன்நீன் முகம்மதென் றேத்த நார்புவி யவியெழுந் தனரால். (120)

மலரணை படுத்த துகிலின்மே னடந்து வானவர் மகளிரேத் தெடு ப்பச், சிலைவல ரபித்தா லிபுமனைக் குரிய திருநபி தமைவளர்த்து வந்து, பலனுறும் பாத்தி மாவெனு மடமா னிருவிழிப் பாவைகண் களிப்ப, விலகிய மடவார் குரவைக ளியம்ப வெழிலவி வாசிமேற் கொண்டார்.()

பேரிகை திமிலை குடப்பறை தடாரி பீலியார் திண்டிம முரசோர், பாரிசப் பதலை யிடக்கைகட் டியநீள் பணவம்வா ரணிதட மொந்தை, பூரிகை நவுரி காகளஞ் சின்னம் போர்வயிர் கொம்புகைத் தாளம்,வாரியு மலைப்பப் பேரிடி மயங்க மண்ணதிர் தாமுழங் கினவால். (122)

வீரன் சைபத்து மடிந்தன னெனும்வெகு ளியினாற்
கோர மாமத காடவெங் களிறெனக் கொதித்துக்
காரின் மின்னெனு மயிலொடும் பரியினைக் கடவிச்
சாரும் வெம்படை யதிர்தா வொளீதுவந் தனனால். (174)

பச்சி ரத்தஞ்செஞ் சேற்றழ றெழநெடும் பாரின்
வச்சி ராயுதங் கொடுவரு மொளீதுவ மறுக
வச்சு வத்தொடு முதன்முறைச் செருவினை யாட்டுக்
கிச்சை யின்படி கிடைத்ததென் றலியும்வந் தெதிர்ந்தார். (175)

கலின வாம்பரி வீரரி லெனதுகை யறிய
வலிய வஞ்சக முகம்மதே யெதிரீவால் வேண்டுஞ்
சிலையுந் தண்டமுங் கட்கமுந் தரித்தொரு சிறுவ
னலிவி லாதிவ னேவெதிர் பவனென நகைத்தான். (176)

படைக்க லத்தொடு நூனையும்வெம் பரியையும் படியி
னடித்து வீழ்த்துவ தரிதல வெதிர்த்தனை யாயிற்
பிடித்து நோக்குவ திலையுன துயிர்க்கொரு பிழையா
யிடுக்க ணெய்துமுன் சார்பிட துறைகவென் றிசைத்தான். (177)

அறிவின் செய்வினை தவிர்வினை யறிகிலா தவரோ
சிறுவர் பூவினிற் சிறுவரா யிருந்துஞ்செவ் வியதீன்
முறைமை நின்றுநல் வணக்கமு மொழுக்கமு முதிர்ந்தோர்
மறனு மாண்மையும் பெரிதென அலிவகுத் துறைத்தார். (178)

தருமமென்றுரை வழங்கின னம்மொழி தனைநீ
வருமமென்றுகொண் டிகழ்ந்தனை யுனைவரைந் திறக்கி
வெரிமு னுக்குவன் காண்டியொல் லையினென விசைத்தான்
பொசியுஞ் செந்தழல் கெழுமிய குழியிடை புகுவான். (179)

நாய கன்றிருத் தூதெனு முகம்மது நபியைக்
காயும் மஞ்சக் கொடியவென் றுரைத்தகட் டுரைக்குந்
தீயி னிற்புகுத் திடுவனென் றெனைச்செறுத் ததற்கும்
வாயி னைக்கிழித் தெறிவன்கண் டறியென வகுத்தார். (180)

இசைத்த வாசகங் கேட்டனு மிருவிழி கனலக்
கசைத்த லம்பொடி படப்பரி யுடைத்திதழ் கடித்து
விசைத்தி டக்கரக் கேடகங் குலுக்கிவெங் கதிர்வா
ளசைத்தெ றிந்தன னுடல்வெம் பரிப்புலி யலியை. (181)

வேறு.

வலிகொடு காபிரை பதறின் மாய்த்துநன்
னிலைகெடுங் கபிலுக்கா ஹுவலை நீங்கிடர்
நலிவற முகம்மதாண் டிருக்கு நாளினிற்
பொலிவுறச் சிலமொழி புகலு வாமரோ. (5)

ஷாமினிற் புக்குமா நிதியந் தன்னொடு
மாமதின் மக்கமா புரத்தின் வைகிய
சூமன பாசுபி யானவன் சொல்லினாற்
றுமவொண் புயத்தவர்க் கெடுத்துச் சாற்றுவான். (6)

பொன்னுநன் மணியுமொத் திலங்கும் பொற்பினாற்
கள்ளிய காமுறுங் காலை வீரக
ளென்னுயி ரனையரிப் புரத்துச் சாதியா
மன்னவர் பதறினின் மடிந்திட் டாரரோ. (7)

பொழிதருஞ் செழுமுகிற் பொருப்பின் சார்பினிற்
கழுதுக ணடம்பல காண வீணினில்
வழுவுறு மொருவனுக் காக மன்னவ
ரெழுவரும் படைபுட னிறத்தல் வேண்டுபோ. (8)

வயமுறு முகவியி னிறந்த மன்னரோ
டியல்புற வுயிரினை யீந்தி டாதொளித்
தயல்புகுந் தனனென வணுகி லாவவப்
பயனுற வுலகமும் பழிக்கு மேகொலாம். (9)

துனிதவிர்த் துதவிசெய் தவர்க டுஞ்சயா
னணிமல பொருளுட னகா நண்ணிபென்
பனிமலர்ப் பஞ்சணை படுத்து நாடொறு
மினியன வுண்டியுண் டிருத்தல் நன்றரோ. (10)

வீணினி லவருயி ரிறத்தன் மேயினன்
பூணரும் பழியெனும் பொறையுந் தாங்கின
றுணிலை வீழ்த்தின னகைக்கு மாயின
றுணினில் வலியனென் றறைய வேண்டுமோ. (11)

உதவிசெய் பவர்க்குயி ருதவி செய்குதல்
விதியுயி ருதவியின் வீழ்த்தி நின்றவர்க்
கிதமுறப் பழிகொளா திருத்த லும்பரின்
பதவியு மிலையிவண் பலனு மில்லையால். (12)

ருவி லாத, மதிவலரெண் பதுபெயருக் களித்தனர்வின் னிலும்புகனு முகம்ம தன்றே. (9)

அரைவலற்றுக் காற்றுத முன்றுறட்டி பெண்பதுபேர்க் களித்து மீறிக், கரைத்தும்பிக் கிடந்தசெழும் பாத்திரத்தை நோக்கி மனங்களிப்புற் றேங்கி, விரைவினுடன் மனையிடத்திற் கொண்டநந்து மெனவுரைப்ப விரும்பி யேந்தி, யாசரபூத் தல்காவு மனையிடத்தினுளரெவர்க்கு மளித்திட் டாரால். (10)

வரிசையபூத் தல்காவு மனைவியும்மு சுலைமென்னு மயிலன்னாளும், பாவியிரு பதம்போற்ற வுயிர்த்துணைவ ரெனுமரசர் பலருஞ்சூழக், குரிசினபி யெழுந்தருளி யுவந்ததிரு மனைகுறுகிக் குறைகடீர, விருநிலத்திற் புகழோங்க தீன்பெருகப் புவிபுரந்தங் கிருந்தாரன்றே. (11)

அபூத்தல்கா விருந்துப் படலம்-முற்றிற்று.

ஆகப் படலம்-26க்குத்-திருவிருத்தம்-1414.

---

## உகுதுப் படலம்.

சிகர மேருவிற் சுடரெனச் செழும்பொழில் மதீனா
நகரி னங்கபி தீனெறி நடத்துபந் நாளின்
மகர வாரியின் மலிதரு படையுடன் மருவா
ருகுதில் வந்தெதிர்ந் தமர்வினைத் தலைவெடுத் துரைப்பாம். (1)

மடுவில் வாளைக ளுகடரு மக்கமா நகரின்
கடிகை மன்னவன் ஹறுபுத லியஅபா சுபியா
னடனு றுந்தனி யாசர்க ளெவரையு மழைத்து
நடுவு றும்படி கருத்தினுற் றவைசில நவில்வான். (2)

பதுறின் மாண்டவர் பழிகொளா திருத்தலே வடுவா
லதனி னும்வடுப் போய்ப்பொரு ளனைத்தையு மிழந்த
திதுவ தன்றியு மினம்வடு வெதிர்பொரா திருத்தல்
புதுந ருத்துளித் தொழுகிய செழுமலர்ப் புயத்தீர். (3)

பூசல்செய் திணங்கா ராவி போக்கிடிற் புகழுண் டன்றிப்
பீசபீ லென்று வீந்தாற் பேறுண்டா மென்ன நெஞ்சி
னேசமுற் றிதுவு மெண்ணித் தூதரு நினைந்து சொன்ன
வாசக மதுவுங் காதிர் கொண்டனர் மானம் பூண்டார். (116)

யாவரு மொரும்பட் டண்ட வெங்கனுஞ் சேனை செல்லத்
தேவர்கண் முன்பின் னேகப் பல்லியஞ் சிலம்பிப் பொங்க
வாவிய பரியுஞ் சூழ வுகுதெனு மலையிற் போந்தார்
பாவையர் மைந்த ரோடு வந்தொரு பாலி னின்றார். (117)

துன்னடல் சுபையி றீன்ற தூயபு தல்லா வென்னு
மன்னவ ரவரோ டைந்து பத்தடன் மாந்தர் சேர்த்துப்
பின்னணி யாக வோர்பா லிறுத்தினர் பிரிவி லாது
மின்னணிந் திலங்குமேகக் குடைநிழல் விளங்கு நின்றார். (118)

குற்றமேற் கொண்ட காபிர் கொடும்படை யதனோ டுற்று
முற்றுந்தோற் றோடி னாலு மல்லது முரண்டி யாங்கள்
வெற்றிகொண் டனமென் றாலு மியாவரே வெருவி னாலு
மற்றொரு தலத்திற் கால்கள் வைத்திட லெனவுஞ் சொன்னார். (119)

சொல்லின னின்ற பின்னர் துனையபூ புக்க ரென்னுங்
கல்வினு லூறுசெய்தோட் காளையு முமறு மின்னே
வெல்லலாங் காபிர் தம்மை யெனவெகுண் டிருவ ரும்போ
ரெல்லையி னமைந்து முன்ன ரிரண்டணி யென்ன நின்றார். (120)

வெண்ணிலாக் கரிய தென்ன விளங்கிவின் னிமிர்ந்து வய்யோ
றண்ணுடற் றங்க வீசுந் தவளவெண் கொடிமு னீண்ட
வெண்ணிடத் தடங்கா நின்ற பேரொளி யிறையோன் றன்மு
னண்ணிய ஹறபீபு தாமு நடுவணி யென்ன நின்றார் (121)

மலையசைந் திடினு நீண்ட மண்ணதிர்ந் திடினு முன்ற
னிலையசைந் திடெனீ யென்ன வுபையினை நெடிது கூறி
யலைகடற் படையோ டும்பின் னணியென நிறுத்தி னன்பின்
னுலைவிலா தவனு நின்றான் வரும்விதி யுணரமாட்டான். (122)

தடுவிட மனைய வேசக் காவிது வலப்பா னிற்ப
விடமருங் கெல்லை மேவி யிக்கிரி மாவு நிற்ப
வடுசமர்க் கிடியே றென்னு மபாசுபி யான்போர் வேட்டு
நடுவணி யென்ன நின்று னடுநிலை யறிகி லாதான். (123)

மாறு கொண்டவ ரிடத்தினி லேகினன் மருண்டு
கோறல் செய்தனன் காணெனத் திருபினன் குழறி
யூறுங் காண்கிலம் விழுந்தனன் வீந்தன னுழன்ற
வாறி தேயெனக் கலங்கினர் பெருங்குபிர் வயவர் (258)

என்ன பாவமிங் கென்செய்கை யேதுவன் மாயம்
வன்னி யொத்தெழு கினத்தினன் வீந்திடும் வகையென்
றுன்னி யுன்னிநெஞ் சகத்தெழு மறிவையு மோட்டித்
தன்னை யும்மறந் துடைந்தனர் கடைபடு தபிசின். (259)

வீடிப் போனதன் றவன்விடும் வஞ்சம்நம் விதியுங்
கூடிக் கொண்டங்ஙன் மூட்டுத றுணிந்தது கோற
னோடிப் பாய்புலி யடங்கிய போனபி நின்று
ளோடிப் போவது கருமமென் றனைவரு முரைத்தார். (260)

விண்டு ளாவிய நறுங்கொடிப் படலமும் விரிந்த
கொண்டல் கீழ்தாக் குலவிய குடைகளுங் கொதித்து
மண்டு போர்செயும் படைக்கலன் களுமண்ணில் வழங்கி
யொன்றி யாய்ச்சென்று போயின ராசர்தம் மூரின். (261)

தூசு விட்டெரிந் தோடினர் சிலர்வழி தூண்டா
வாசி மேற்கொண்டு பறிந்தனர் சிலர்மன மேங்கி
யாசை தோறினு மோடினர் சிலரகன் முதுகு
கூசிக் கூசிநின் றோடினர் சிலர்பெருங் குபிரர் (262)

மூண்டு வந்தெழுங் காபிர்க ளியாவரு முறிய
மாண்ட யங்கிய முகம்மது மமைத்திகல் வாய்மை
தேண்ட தீனவ ரியாரையு மொருப்படத் திரட்டி
யாண்டி ருக்கின்ற சகுபெனுந் தலத்தினி லானார். (263)

வீய்ந்த தீனவ ரெவரெவ ரெனநபி வினவ
வாய்ந்த நெஞ்சின ராறுபத் தைந்தெனு மாசர்
மாய்ந்து போயின ரவர்களிற் றலைமைமன் னவர்கள்
காய்ந்த சீற்றத்த ரீரெழு பெயரெனக் கரைந்தார். (264)

இந்த மன்னவர் தம்மையங் கறிந்தறிந் தெடுத்து
விந்தை யாம்படி யடக்குதற் செழுந்தனர் விரைவின்
வந்து செங்கள நோக்கினர் நோக்கலு மருண்டார்
சிந்தி வீழ்ந்தன ருருத்தெரி யாதெனத் தியங்கி. (265)

நேசமுறு செல்வநிறை மன்னரைநி றுத்திப்
* பாசமுறு பேதையர்கள் பாலினித லித்தார். (15)

இஞ்சியினி ருந்தபொரு ளெட்டுணையு மின்றி
நெஞ்சின்மகிழ் வுற்றுமிடி யர்க்குதவி நேச
மிஞ்சுபய ஹாம்பர்மற வேந்தர்படை சூழ
வஞ்சமற வேமதின் மாநகரின் வந்தார். (16)

பிறங்குபத ணத்தெயில்பி டித்திவ ணடைந்த
மறங்கெழுமன் ஸரிக ளுவப்புற மகிழ்ந்தே
யறங்குலவு கத்தனருள் பெற்றசில வாயத்
திறங்கின தவத்துறை முகம்மதி னிடத்தே. (17)

* சுகுறுப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் 30-க்குத் திருவிருத்தம் 1794.

## பதுறுசுகுறூப் படலம்.

போற்றும் வேதநூற் புண்ணியர், மாற்ற மீறவே வாழுநாட்
சாற்று துல்கயி தாவெனு, மேற்ற மாதமா மேல்வையில். (1)

உருதெ னும்படை யுற்றிடத், தகவி லாப்புறந் தந்தநா
விகல பாசுபி யானெனுந், திகழ்த ரும்மவச் செய்கையன். (2)

பதுறி னிற்பலர் வந்திடுஞ், சதுர்மி குத்திடுஞ் சந்தையி
லிதமொ டும்நபி யெய்திறற், கதமு டைத்திறங் காணலாம். (3)

என்ன வஞ்சின மீறவே, சொன்ன வஞ்சகத் துட்டனும்
மன்ன நாளினி லன்புற, மன்னர் சூழ்வர வந்தனன். (4)

மொன்பன் மாமணி பூடண, மென்ப யாவையு மேயவ
னங்பி னுலவி டத்தில்வைத், தின்ப மாகவி ருந்தனன். (5)

---

* பாசமுறு பேதையர், இப்பொருள்கள் வேண்டிய மிடியரென்று கொள்க.

அலைத்த டக்குவ லயத்தினிற் றிறங்கெழும் ஹாஷீங்
குலத்து சித்தமங் கையர்க்குமுன் றீனினைக் குறித்து
நலத்தின் மெய்க்கதி தருமிசு லாத்தினை நணுகி
சிலைத்து வெங்குபிர் மதத்தினை நெகிழ்ந்தன ளுலும். (16)

வேறு.

சாப முகைலலி யென்னுந் தன்மைசேர்
மாபுகழ் மைந்தர்மூ வரையு மங்கையர்
தீபமென் றொளிர்சுமா னுவைச் செவ்விசேர்
தர்ப மாமும்மு ஹானித் தாயையும். (17)

ஈங்கிவை யுரைத்தவை வரையு மீண்டெடுத்
தோங்கிய வரிசையு முயர்ந்த பேறுமே
தாங்கிய தாலென் தருமைத் தாயர்க்குப்
பாங்கொடு வரிசையிப் படிசெய் தேனென்றார். (18)

திருநபி தருமொழி செவியிற் கேட்டனு
மொருவருக் கொருவருள் ளுவகை கூர்ந்துநற்
பரிவொடும் பாத்திஆ வோதிப் பண்புடன்
மருவிய மனையிடம் வந்து புக்கினர். (19)

மறைமுறைப் படிசடங் கமைத்து மாசறக்
குறைபடு துயரினைத் துடைத்துக் கோதிலா
திறையவன் றனைப்பணிந் தின்ப மாட்சிபெறந்
றறிவுட னபியர சானு நாளினில் (20)

உசைனார் பிறந்தபடலம்-முற்றிற்று.

ஆகப் படலம்-32-க்குத்-திருவிருத்தம் 1832.

## தாத்துற்றஹாக்குப் படலம்.

ஹிஜ்ரி மூன்றும் வருடம் — கந்தாறுப்போர்

வதுவையிற் கொடையிற் போரின் மலிந்தமும் முரச மாறு
ததிர்தரு மதீன மூது ரண்ணல்தாத் துற்ற ஹாக்குப்
பதியினில் வாழுங் கத்து பானெனுங் கேளிர் தம்மே
லெதிர்பொர வேண்டு மென்ன வெழுந்தனர் விரைவி னன்றே.(1

- ஸ்தோத்திரம். [illegible] : 1 : 102

கொலையும் வஞ்சமுங் கொண்டுவெங் கோறவி
னிலையி னின்றனர் நின்னப யம்மென
வலிதின் வந்து வணங்கின ரேயெனி
னலிவி லாதவர்க் காக்கவு நன்றரோ. (66)

காட்டு திண்மற னிக்கதிர் வாளையும்
போட்டு விட்டெதிர் நின்று புலம்பியே
தாட்டு ணைத்தவஞ் சாந்தவிவ் வேழையை
வீட்டி னுலதில் வெற்றியுண் டாகுமோ. (67)

மிஞ்சு திண்மைசெய் மேவலர் கையுறி
னஞ்செ னத்திற் வின்பமங் நாளரோ
அஞ்ச லென்றப யங்கொடுத் தாலுயிர்
துஞ்சி னும்புகழ் வைகலுந் துஞ்சுமால். (68)

அன்பி னுக்கொரு வேலி யவமெனுந்
துன்பி னுக்கருந் தூய மருந்துமீ
றின்ப முற்றுற வீண்டிய மெய்த்தவம்
வன்ப கற்றிய வாள்பொறை மாட்சியே. (69)

கல்வி யாசறக் கற்றுணர்ந் தீகைசேர்
செல்வ மீறுசி றப்புடை யோரிடஞ்
சொல்லு நீர்மைப் பொறையெனுந் தூய்மையோ
னில்லை யேனுந் தெழும்புகழ் வீயுமால். (70)

புன்றொ ழிற்கொலை வித்தை பொருந்திய
மன்றி றத்து மனத்தவர் மெய்யுளங்
குன்றி நிற்பக் குறைகள் பொறுத்தநன்
னன்ற னிக்கி னசைபெரி தாகுமால். (71)

ஆதி யோன்முன ருளிய வாய்மைசேர்
நீத வேத நெறிமுறை நின்றுகா
மேத மேபொறுத் தின்றுவிட் டாலவன்
சூதும் பொய்மன நன்மையுஞ் சூழுமால். (72)

என்று நன்மொழி யின்னன பன்னியே
யன்ன வன்றுய ராற்றிச் செலவிடுத்
தன்று தோழ ருடனேழுந் தொல்லையின்
மன்னு கானக நீங்கி வழிக்கொண்டார். (73)

ஈங்கு வஞ்சினங் கூறியி சொற்படி யெழுந்து
நீங்கி லாதகா னியாறும்வெம் பாலையு நீந்தித்
தீங்கு றுதியா னேகிய நெறியினில் தீனோ
ராங்கி யாவருந் துயில்வது காண்டக மகிழ்ந்தேன் (90)

தேட ரும்பொரு ளடித்தலத் திடறிய திறம்போ
ஞடி யின்றிமர் தமைத்தெற வருநட வையினிற்
கூடும் வல்வினை முட்டிய திவனெனக் குறிகொண்
டாடல் வென்றிசே ரகமது துயிலிட மடுத்தேன். (91)

தருவிற் சாத்திய வாளினைத் தடக்கரத் தேந்திக்
கரிய வள்ளுறை கழித்தலுந் தூதர்கண் விழித்துத்
தெரிய நோக்கினர் நோக்கலுங் காதலந் திருகி
யிருநி லத்திடை விழுந்தமு நாந்தக மிமைப்பின். (92)

கண்ட கத்தையு முகம்மது திருச்செழுங் கரத்திற்
கொண்ட டர்த்திடத் தெருமந்து மருண்டுளங் குழைந்து
மண்ட லத்திலென் பிழைதவிர்த் திடிகென வணங்கி
விண்டு ரைத்தன னவைபொறுத் திருத்தினர் மேலோ. (93)

மருங்கி ருந்ததீன் னவ ரனைவரும் வலிதி
னெருங்கி வந்துருத் தாத்தனை வீழ்த்தமுன் னோர்ந்தார்
தருங்கை வள்ளலா ரங்கவர் கதத்தினைத் தவிர்த்தே
யொருங்கு போவென விடுத்திட மீண்டிவ னுறைந்தேன். (94)

எண்ணு தற்கரும் பெரும்பிழை யியற்றியு மிரங்கித்
தண்ணெனன் வாய்மொழி கொடுத்தளித் தடைக்கலந் தந்தார்
புண்ணி யத்தின்மே னின்றவர்க் கல்லதிப் பொறுமை
யொண்ணு மோமற்றி யாவர்க்கு முத்திரு ழுலகில் (95)

வெருவு றும்மனத் துன்பமும் விளைவுறு பயமு
மருளுந் தீர்கிலா மயக்கமு மாற்றியன் னோர்தம்
பெரிய வன்னரு ளாலென துயிர்தந்த பெற்றி
யருளி னுக்கெதி ருதவிநம் மாற்செய்ய ராமோ. (96)

சிறுமை செய்பவர் நாணுறக் கொடியவன் தீமை
பெறுவ ரென்மது நல்வினை யியற்றிய பெரியோர்
முறையி னல்வழி பெறுவரென் பதுமுன மெடுத்த
வுறைக ழித்தவை வாளெனக் குரைத்திட வுணர்ந்தேன். (97)

தழல்சொரி தறுகட் பாந்த ணெடுநிலம் பணிப்பத் தாங்கா
தொழுகுநெய் செறிந்த கவள்வே லுழவர் மூனடப்பச் சீறி
யெழுமதி வேகப் பாய்மா வேறிமன் குயையென் றோது
மழகனி றனையான் கஃபா மக்கமா நகரிற் புக்கான். (19)

வந்தொரு பாலிற் றானை யாவையு மிருத்தி வாய்ந்த
வந்தாத் தருமே றன்ன அபாசுபி யானை யெய்திச்
சிந்தையி னுவகை கூரச் செழுங்கையாற் றழுவி வாசக்
கொந்தெறி யலங்கற் றிண்டோள் குயையவ னிருந்தான் மன்னோ. ()

தீயவன் கொலைசேர் வஞ்சச் சிந்தையன் சிதையு மாற்ற
வாயினன் பவத்திற்றோன்று மபூஜகல் மகிழ்வி னீன்ற
சேயனிக் கிரிமா வென்னுந் தோன்றலுந் துணைவர் சேர்ந்த
நேயமன் னவர்க டாமு மீண்டவ ணிறைந்தார் மன்னோ. (21)

குறைஷியங் காபீர் வாய்ந்த குணனுடை மாந்தர் மிக்க
அறபிக ளுலக நீதி யாவையு மறிந்த மேலோர்
மறையினைத் தெருண்டு நின்றோ ரியாவரு மருங்கு சூழக்
கறைகெழு மனத்தன் கேண்மீ னீதெனக் கழறலுற்றான். (22)

ஊழு மிருப்பத் தேருஞ் சூழ்ச்சியு மிருப்பக் காபி
ரியாருமீண் டிருப்ப வென்றி யாசரு மிருப்ப மற்று
நீருமிங் கிருப்ப வெண்போ னேசமி ருப்ப விந்தப்
பாரினிற் சமய மொன்றுந் தேயுமோ பகையி னொல்கி. (23)

காய்ந்திக றுடங்கி நின்ற அபூஜகல் கருபு வேந்தன்
வீய்ந்தும்ரா மனங்கொள் ளாது வாழ்வினை விருப்ப முற்றுந்
தேய்ந்தன பழியும் பாருஞ் சொல்லின வசையுந் தோன்றத்
தீய்ந்தன பெருமை நாளும் வளர்ந்தன சிறுமை யன்றோ. (24)

முன்னவ ரியாருங் கூண்டு மூட்படை முகம்ம தானே
னிந்நக ரதனிற் புக்கா நீடுபட் டிரியச் செய்தா
ரன்னவர் திறமை நற்றொன் றாயினு மமைத்தா மின்றே
யென்னினிச் செய்ய லாகு மிசையினை யவித்துக் கொண்டாம். (25)

ஆதிநாற் சமயம் வீணிற் றேய்வுற வழங்கி லாது
வாதியா வந்த மார்க்கம் விளங்குற வறைந்த தென்னே
நீதியும் பழிய தாகு மேடறம் பவத்தி னெய்தும்
பேதுற மாபின் வந்த பெரியருஞ் சிறிய ராவார். (26)

திரிகி னீண்டற வளைந்தெழு மருப்பின்மெய் செறிந்து
பெருகு கின்றசெம் மயிருறப் பினிலெழில பிறங்குங்
கருநி றக்கவைக் குளம்பினீண் டெழுதுளைக் காதி
னுருவின் மிக்கதென் றுளாநின் றதுகொறி யுழையின். (75)

காலி னூற்றலை நடந்துடன் முறுக்கியுட் கவிந்த
தோலு டைச்செவி யசைத்தசை போட்டுவாய் துவளும்
வாலி னைப்பைய வாட்டிவா வெனத்தொனி வழங்கிப்
பாலி னின்றது முன்னுருப் போன்றெழும் படிமை. (76)

நின்ற மையினை நடத்தியுட் களிப்பொடு நினது
வென்றி வாழ்மனை யிடத்தினி லேகென விரிப்ப
நன்று நன்றெனக் காத்தினிற் பிடித்தில்ல நாடிச்
சென்று புக்கின ரரண் மனைத்தையுந் தெருண்டோர். (77)

வந்த போதினின் மனைமனை வாளனை நோக்கி
யந்த மும்பெறு முயர்ச்சியு நிறமுநீ ளடியு
நந்தம் வீட்டினி லிருந்தமை யெனத்தனி நணுகி
புந்தி நின்றதிங் கேதென வதிசயித் துரைத்தாள். (78)

வடித்த தீனினை வானரு மனமகிழ் வுறவைத்
தெடுத்த தூதுவ ராருயிர் கொறியினுக் கினிதின்
விடுத்தி யாவரு மதிசயம் பெறப்புவி விளங்கக்
கொடுத்த தீதென வுரைத்தனர் கோளரி யனையார். (79)

கூறுநல்லுரை கேட்டகங் குளிர்ந்தெந்த நாளுந்
தேறி லாதியா னிருந்தனன் றிடம்பெற வின்னே
பேறு கொண்டநன் னபியெனத் தெளிந்தனன் பெரியோன்
வீறு காணென மதித்துரைத் தனள்விருந் தனையே. (80)

உரிமை யின்னன மகிழ்வுறச் சாபிரோன் டிருந்து
மரிய வேந்தருந் தோழரு மருகினிற் சூழக்
கரிய மைமுகி னிழற்றிடக் காரணங் காட்டும்
பொருவி லாநபி கடலெனு மகழின்பாற் புக்கார். (81)

விரைந்து மன்னவ ரவரவர் தனித்தனி மேவி
யகந்து சூழ்கழக் கிடக்கினை யழகுறத் திருத்தி
சொரிந்த நீள்கரைப் புடவியும் வரையெனத் தோன்றத்
திருந்த வேயமைத் தனர் குயிர்த் திருந்தலர் திகைப்ப. (82)

# ஹுமா மீமான்கொண்ட படலம்.

மலக்குகள்வின் னாடைய நபியிறசூல் மதீனநகர் வாழுநாளில்,
விலக்கரிய வருடமொரு நான்குநிறைந் தைந்தாண்டு மேவும்போதி,
லலககணுறுச் சுடரொளியா மல்லாவின் பணிவிடையா லவனி மீதிற்,
றுலக்கமுற வந்த ஹஜ்ஜுப் பறுலான தின்று முதற்றெழுவிரொன்றே.

தள்ளரிய மனத்தறிவுதனையகற்றி மெய்மயக்கந் தந்துநட்பா, யுள்
ளவரைப் பகையாக்கி யுரைப்பதிவை யெனவறியா துரைக்கப்பண்ணுங்
கள்ளுணவும் வெறிமதுவும் ஹறாமெனவா யத்து வாக்கண்டன் பாகி,
விள்ளரிய மறைப்பொருளைச் சபிகுகளுக் குரைத்தெவர்க்கும் விளக்கி
னாரே. (2)

விளம்பிநெறி முறைதவறா வெத யவணிருப்ப மிக்க நீதி, வளம்
பலவு முயர்ந்தபுசழ் வளர்ந்தகுண நிறைந்தவுனு மாமாண் டெய்தி,
யுளம்களிகூர்ந் தருணபி யெவனெனவே வினவிதோ வுற்றா ரென்
னக், களங்கமற வருகிருந்தோர் சொலவடுத்துக் கண்டுசில் கழறலுற்
றான். (3)

பேசபுகழ் தோபுதுல் முத்தலிபு தனக்குரிய பேரனாரே, மாசற
வோர் காரியத்தைத் திடுக்காக விமைக்கேட்க மதித்தேனென்மே, னா
சமுற நீர்கோப மில்லாமற் சொலவேண்டு நிசயா மென்னத், தேசுறு
மெய் நபியவனை வேண்டுவன கேளெனவே செப்பினாரால். (4)

ஓதுமொழிக் கவருவந்த வுண்மைகண்டு நின்றவிய ஹுஹுமாம்
சொல்வான், நீதிலா மறைப்பொருளாய்த் திகழொளியாய் நிறைந்த
அல்லா ஜெகத்தின் மேற்றன், றாதரா யுமையிருக்க வனுப்பினதுங்
காலமைத்துந் தொழுக வென்றுங், காதலுடன் ஸக்காத்து நோன்பு
ஹஜ்ஜும் பறுலெனவே கழறு னைந்தும். (5)

மெய்யாமோசாதமெனி விறையவன்றன் மேலானைவிளம்பு மென்
னப், பொய்யாத நபிவசன மைந்துக் கைந்து தருமிறைமேற் புகன்று
ரானை, யையாநீர் சொன்னதுண்மை யெனவுஹுமா மீமானிலாகி நெஞ்ச
மையாருங் குபிர்நீக்கிக் கலிமாவு மொழிந்து மறை வழிநின்றாரே. (6)

யொல்லை யிற்சென் றதுஞ்செய்து மாமறை
சொல்லி ரண்டிறக் ஆத்துத் தொழுதபின். (3)

வாய்மை நீதி நபிபறக் கத்திறு
ஞய னேயென் னயனந் தருதியென்
றேய வண்மை துலுவிரந் தாயெனிற்
றாய கண்க லெங்குமென் றேருதினர். (4)

அந்த நன்மொழி கேட்டிசைந் தந்தகன்
சிந்தை யார மகிழ்ந்துலுச் செய்திறை
தந்த வேத முறைப்படி தான்றெழு
தெந்த நாளு மிலங்குஞ் சுடரினை. (5)

உன்னி யோதித் துலுவிரந் துண்மையின்
மன்னு மாநபி தம்பறக் கத்திறு
வின்ன றீர வினைவிழி யீதியென்
றன்ன வாய்மையி னேடறைந் தானரோ. (6)

மற்று வமையில் லானல் வரத்திறைற்
குற்ற முற்ற விழியுங் குவளையை
வெற்றி கொண்டு விரைமலர்ப் பூங்பய
முற்றெரு துங்க வுதித்த தெழுந்ததே. (7)

மன்றி லன்னை தாலரு நான்முத
லன்ற ளவுக்கு மந்தக ஞனவ
னின்ற கண்வரப் பெற்றெதிர் நீங்கிய
கன்று கண்ட கபிலையொல் பாயினன். (8)

பாங்கி னின்று நபிபதத் தாமரை
தாங்கிச் சென்னி தனில்வைத்துக் கைகளா
லோங்கு கின்ற சலாமுரைத் தன்னவ
னீங்கி டாத நெடுநகர்க் கேகினன். (9)

திரைசெய் வாரித் திசைசெறிந் தீண்டிய
வாசர் போற்றிய மூல நபிமறை
யுரைசெய் தோங்கு முயர்புக ழியாவரும்
பாவ வாழ்வி பரிந்துறு நாளினில். (10)

வேறு.

வினைபுறங் கண்ட வேற்கை விறனபி மகிழ்ந்தன் பாகிக்
கனைகழல் சல்மா வென்னும் காளைதன் வதன நோக்கி
மனையினுக் குரியனாக வந்தவன் றபாரும் வெற்றிப்
புனைமல ரணியுந் திண்டோட் பொதுவனு நீருமாக. (7)

ஒருகுடங்கவரி சோகமுள்ளவை சாய்த்துக் கொண்டு
தருவுறை காபாவென்னுந் தலத்திடை தன்னின் மேய்த்து
வருவிர்க ணீவிரென்று மறைபிடந் தலப்பும் வாயாற்
றிருவுளம் பற்றினாரிம் மூவருஞ் சென்னி தாழ்த்தார். (8)

தொடை மழைபொழியும் விற்றோட் டுணைவர்க ளிருவர்சூழக்
கடைமணிக் கலினப் பாய்மாக் காவலர் சல்மா வென்னு
மடைசெறி கடகத்தோளர் வரிசிலை யொன்று தாங்கி
யுடைகட லனையகாலே யம்முட னுவந்து போந்தார். (9)

வேறு.

திரை நுகர்கருஞ்சூற் கனங்கிடந் தலறத் திகைத்தெழும்பிடி மடி சுரந்த, புரைசுரை சுவைத்துப் பால்வெடிமறாத புனிற்றிளங் கன்று மேய்த்துறங்கும், வரைபல விறப்ப வுளிகுடைந்தறுத்த தட்டவா யுரற் றலைக் கேழற், பொருகளி றுழக்க விரிகாங்கரிகள் போந்திடும் வனங்களுங் கடந்தார். (10)

மழைசெறிந் திருண்டு கதிரவன் றோன்றா வனங்களும் புனங்களுங் கடந்து, தழைசெறிந் திலங்கும் வாவியு மோடைத்தடங்களு நதிகளுங்குறுகி, யுழையினை மோடித் தவித்துளங் தலைந்த வொண்பாற் பாலையுஞ் செந்தேன், பொழிதரு சோலைப் படப்பையுங்கடந்து போயினர் நிரைகண் முன்னேக. (11)

நீங்கருஞ் சேற்றி வீற்றுளைந் தலறி நிலாவெனச் சங்குமுத் துயிர்க்கப், பூங்கருங் குவளை யலர்ந்திடும் விரும்பிப் புள்ளறுகால்படத்தகர்ந்து, தீங்கறும் பெருத்திற் றாங்குதே னுடைத்து சிதறிடும் பணைபுடைசூழ்ந், தாங்கல்சேர் வளமை செறிந்திடுங் *காபாவென்னுமத் தலத்தினைக்கண்டார். (12)

நிரைநிரை செறிந்த குட்டியுங் கன்று கெடுங்கழுத் தொருத்தலுஞ் சுரந்த, சுரைமடி வீங்கி நடைபெயர்த் தொதுங்குஞ் சுரபியும் புனிற்றிளந் தேனு, விரைமலர்க் குவளை மணமருத்கயவாய் மேதியுங்

வெண்ணிறப் பேழ்வாய்க் கருமுகைச்சங்கம் விளைந்தகுன் முதிர்
ந்துளைந் தலறிப், பண்ணுறப் புலம்பி மணியின முயிர்த்தபங் கயவகழி
நீ ருடுத்துக், கண்ணகன் ஞால மொருங்கொரு புடையிற் கவினுற வ
மைத்தவா னவர்க, ளெண்ணுற நிவந்த புரிசைசூழ் மதினத் தேஙின
ரிடுமுகில் கவிப்ப. (98)

இருவிசும் பூர வலஞ்சுழன் றேகு மெழுபரிப் பரிதி கண்டேங்கி,
வெருவறும் வங்கூழாட்டிட நடங்கும் வெண்கொடி மாடமுஞ் சிறந்த,
வருமலை மழலைச் சிறுவிரி னெடுந்தேர் குழித்திடு மணிமறு கிடமும்,
கருமுகி லகலாச் சுடுநிலத் தமைத்த சாலையும் பலபல கடந்தார். (99)

சொற்பொருள் சிதாகப் பாயிரம் பாகைச் சுருதிநூல் வல்லவர்
தம்பாற், கற்பவரோது நனியறச் சாலை கடைத்தலை மறுகையுங்கடந்து,
விற்போதி தவள வெண்ணிலா மணியால் வியனுறத் திருத்திய நவுலா
விற்புகுந் திருந்தா ரிமையவர் பணிகேட் டிறைஞ்சிட வருமிற சூலே.

சல்மா பொருதபடலம்-முற்றிற்று.

ஆகப்படலம்-45-க்குத்-திருவிருத்தம்-2666.

## உறனிக் கூட்டத்தார் படலம்.

மறைவிளை யாடி நாத்தழும் பேறு முகம்மதாண் டிருக்குமந்நாளி
ற், குறைபடு முறணிக் கூட்டத்தி லெண்மர் வந்தனர் குணமுடனேகி,
யறைகழ லரசர் பணிபதாம் புயத்தி லழிந்திடச்சிரசினை வைத்து, நிறை
வறக் கலிமா வினைப்பகர்ந் திருந்தார் நிறைபழற் புகுதுயீர் மையினர்.

கடையளந் தறியார் பெருநகரதனி லிருந்திடுங் காலையிற் சிறந்த,
வுடறடு மாறப் பருவா னோய்வந் தடைந்திட வுடைந்தனர் பெரிதாய்ப்,
படவா வுலகம் பொதுவரப் புரந்த பார்த்திவ ரெண்மரை நோக்கி,மடை
செறி மறைநா வலம்புசெந் நாவான் மகிழ்வொடும் பார்த்தரு ளினால்.

அதுகேட்டு, மரைக்காயரவர்கள் அந்த ஏழையைப்பார்த்து உன் மனமகிழ்ச்சியாக இரண்டாயிரம் ரூபாயும், என் வங்கிஷத்திலுள்ளவோர் பெண்ணுங் கலியாண முடித்துத் தருகிறேன், இப்போ துன்னிடமிருக்கிற பெண்ணைத் தலாக்குச்செய்து போடுகிறாயா வென்று கேட்டார்கள், அதற்கவன் சம்மதித்துத்தன் பெண்சாதியைத் தலாக்குச் சொல்லிப்போட்டுவந்து மரைக்காய ரவர்களுக்குத் தெரியப்படுத்தினான், அவர்கள் தாங்கள்சொன்ன விசுவாசம்போல் அவனுக்கு ரூபாய் இரண்டாயிரமுங்கொடுத்து ஓர் பெண்ணையுங் கலியாணஞ்செய்து வைத்தார்கள், பின்னர் அந்தப்பெண்ணை ஐந்தாநாட் கழித்து உமறுப்புலவரவர்களுக்குக் கலியாணஞ்செய்து வைத்தார்கள் அதனாலேதான் புலவரவர்களுக்கு நாகலாதபுரத்திலுங், கீழக்கரையிலும் பெண்டு பிள்ளைகளுண்டா யிருந்தார்கள் இது நிற்க,

ஷைகு சதக்கத்துல்லா சாகிபொலியவர்கள், நபிநாயகமவர்களின் தலைமுறையையும், அவதாரத்தையும் பல கித்தாபுகளிலுந்தேடிப் புறக்கியெடுத் தொருசேகரமாக வரைபடுத்தித் தமிழி லெழுதி, உமறுப்புலவரவர்களை யழைத்து, அவர்களோடும் புலவரே சீறாவினுரையொருசேகரமாக இங்கே யெங்குங்கிடையாது ஆனாற் பலகித்தாபுகளிலும் றிவாயத்துகளாய் எழுதப்பட்டிருக்கும், அவைகளைத் தேடியெடுத் துரையெழுதித்தரவேண்டுமென்றால் இப்போ தென்னிடத்தில் கித்தாபோதுகிற பிள்ளைகளுக்கு பாடங்கெட்டுப்போகும் அது பெரிய வேலையாயிருப்பதால் என்னிடத்தி லோதினவரான தம்பி மாமுநயினார்லெப்பை யென்பவர், மகுமூதுபந்த ரென்னும் பறங்கிப்பேட்டையிற் குடிபதியாயிருக்கிறார், அவருக்கு நான் காயிதமெழுதியிருக்கிறேன் அவரிடத்திற் நீர்போம் உமக்கவர் நன்றாக வுரையெழுதித் தருவார் தமிழ்ப் பாஷையிலுந் தேர்ந்தவர்தானென்று சொன்னார்கள் அது கேட்டுப் புலவரவர்கள் நல்லதென்றுசொல்லிச் செய்தக்காதிர் மரைக்காயவர்களுக்கு மிச்செய்தியைத் தெரிவித்துச் செலவுக்குக்கொஞ்சம் பொருளும் பெற்றுக் கொண்டு பறங்கிப்பேட்டைக்குவந்து ஆலிம்சாகிபவர்களைக் கண்டு மிலாக்கத்தாகி யுரையும் எழுதி வாங்கிக்கொண்டு வருகிறநாளிற் செய்தக்காதிர் மரைக் காயரவர்கள் ஆண்டவனேமித்த நாள் முடிகினதினால், ஷைகு சதக்கத்துல்லா சாகிபொலியவர்களின் கோபவாக் கொன்றைப் பெற்றவர்களாய் மவுத்தாகிப் போனார்கள். அதனோடு எட்டையாபுரத்திலும் கவாபுபாளையம் போய்விழுந்து கடபிடியாயிற்று இவ்விரண்டையும் புலவரவர்கள் நினைத்து சஞ்சலித்துக்கொண்டிருக்கையில்,

